பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**24 02 2026 TUESDAY 7.15 PM**

ஆகாஷவாணி

## தலைப்புச் செய்திகள்

1. குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று மும்பையில் ஆரோக்கிய இந்தியாவை உருவாக்குவோம் என்ற தேசிய அளவிலான இயக்கத்தை தொடங்கிவைக்கிறார்.

2. நாட்டிற்கு முதலிடம் அளிக்கும் உறுதிபாட்டோடு நாம் ஒவ்வொருவரும் செயல்பட வேண்டும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

3. வடகிழக்கு மாநில மக்களின் பாதுகாப்பும், கண்ணியமும் உறுதி செய்யப்பட வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.

4. கேரள மாநிலத்தை ''கேரளம்'' என மாற்றுவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

5. தெலங்கானாவின் ஹைதராபாதில் நான்கு நக்சலைட்டுகள் இன்று சரணடைந்தனர்.

- - - இனி விரிவான செய்திகள் —

<<<<<<<>>>>>>

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு இரண்டு நாள் பயணமாக மும்பை சென்றுள்ளார்.

மகாராஷ்ட்ரா மாநிலத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் குடியரசுத் தலைவர் கலந்துகொள்கிறார்.

இன்று ஆளுநர் மாளிகை லோக் பவனில், ஆரோக்கிய இந்தியாவை உருவாக்குவோம் என்ற தேசிய அளவிலான இயக்கத்தை தொடங்கிவைக்கிறார்.

நாளை ஆயுஷ் அமைச்சகத்தின் சார்பில், தேசிய ஆரோக்கிய கண்காட்சியை புல்தானா மாவட்டத்தில் தொடங்கிவைக்கிறார்.

பின்னர், நாக்பூரில் பிரம்ம குமாரிகள் அமைப்பின் சார்பில் நடைபெறும் நிகழ்ச்சியிலும் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கலந்துகொள்கிறார்.

<<<<<<<>>>>>>>

நாட்டிற்கு முதலிடம் அளிக்கும் உறுதிபாட்டோடு நாம் ஒவ்வொருவரும் செயல்பட வேண்டும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

மேற்குவங்க மாநிலம் டார்ஜிலிங்கில் இளையோர் கூட்டமைப்பு உறுப்பினர்கள் இடையே உரையாடிய அவர், தேசிய மற்றும் மண்டல அளவிலான எதிர்பார்ப்புகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும்போது நல்லிணக்கமும் காக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார்.

நாட்டின் கலாச்சார பாரம்பரியத்தை பாதுகாக்க முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று கூறிய அவர், இதில் அரசும், நாட்டு மக்களும் இணைந்து செயல்பட வேண்டும் என்று குறிப்பிட்டார்.

டார்ஜிலிங்கின் கலாச்சார பாரம்பரியத்தை குறிப்பிட்ட திரு சி பி ராதாகிருஷ்ணன், இப்பகுதி மக்களிடையே நாட்டின் தொன்மை சிறப்பு வாய்ந்த பாரம்பரியம் பாதுகாக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>>

வடகிழக்கு மாநில மக்களின் கண்ணியமும், பாதுகாப்பும் உறுதி செய்யப்பட வேண்டும் என்று வடகிழக்கு மாநிலங்கள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், வடகிழக்கு மாநில மக்களுக்கு இழைக்கப்படும் அநீதியை பொறுத்துக் கொள்ள முடியாது என்றும் உறுதிபட தெரிவித்துள்ளார்.

தெற்கு தில்லி பகுதியில், இனவாத துன்புறுத்தலால் அருணாச்சலப் பிரதேசத்தை சேர்ந்த மூன்று பெண்கள் பாதிக்கப்பட்டது குறித்து கவலை தெரிவித்த அமைச்சர், இதுதொடர்பாக அம்மாநில முதலமைச்சர் திரு **Pema Khandu**-வை தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசியதாகவும், உடனடியாக தில்லி காவல்துறை ஆணையரை தொடர்புகொண்டு, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டதாகவும் கூறியுள்ளார்.

இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுவிட்டதாகவும், குற்றவாளிகள் விரைவில் பிடிபடுவார்கள் என்றும் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>

தில்லி மற்றும் புறநகர் பகுதிகளில் சாலைகளில் புழுதி மாசுவை கட்டுப்படுத்துவதற்கான நிரந்தர நிர்வாக கட்டமைப்பை உருவாக்கும் நோக்கில், நான்கு முக்கிய புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் இன்று புதுதில்லியில் கையெழுத்தாகின.

மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு புபேந்தர் யாதவ் முன்னிலையில் இந்த ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.

இந்நிகழ்வின்போது பேசிய மத்திய அமைச்சர், காற்றின் மண் துகள்கள் பரவுவதை தடுப்பதன் மூலம், காற்று மாசுபடுவதை குறைக்க முடியும் என்று கூறினார்.

போக்குவரத்து காரணமாக அதிக புழுதி ஏற்படுவதுடன், அதிக அளவில் புகை மாசுவும் ஏற்படுவது உறுதி செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மாசுவை கட்டுப்படுத்தும் வகையில் அதிக அளவில் பசுமையான செடிகளை சாலையோரங்கள் மற்றும் காலியான இடங்களில் வளர்க்க வேண்டியது அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த ஒப்பந்தங்கள் தலைநகர் மற்றும் சுற்றியுள்ள, மாநில அரசுகளுக்கும், காற்று மாசுபாடு தடுப்பு நிர்வாகத்திற்கான ஆணையத்துக்கும் இடையே இந்த நான்கு ஒப்பந்தங்களும் கையெழுத்தாயின.

<<<<<<<>>>>>>

பிரதமரின் புதிய அலுவலகமான சேவா தீர்த்தில் எடுக்கப்படும் ஒவ்வொரு நிர்வாக முடிவும், நாட்டின் கடைக்கோடி மனிதனின் வாழ்வையும் எளிதாக்கும் என்று மத்திய அமைச்சரவை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

பிரதமரின் புதிய அலுவலகமான சேவா தீர்த்தில் இன்று பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில், ஒவ்வொரு இந்தியனுக்கும் அதிகாரம் அளிக்கும் மையமாக இது செயல்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மத்திய அரசின் தொலைநோக்கு பார்வைக்கு ஏற்ப, வெளிப்படையான நிர்வாக மாதிரியை சேவா தீர்த் அலுவலகம் வெளிப்படுத்தும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அமைச்சரவைக் கூட்டத்தில் கேரள மாநிலத்தை ''கேரளம்'' என்று அங்கீகரிப்பதற்கு அம்மாநில சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

அரசியலமைப்புச் சட்டத்தின் மூன்றாவது பிரிவின்கீழ், கேரள அரசின் தீர்மானம் ஏற்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

இந்தியா — அமெரிக்கா இடையே **Vajra Prahar** என்ற கூட்டு சிறப்புப்படை ராணுவ பயிற்சி இன்று இமாச்சலப்பிரதேசத்தில் தொடங்கியது.

இம்மாதம் **16**-ஆம் தேதிவரை நடைபெறும் இந்த பயிற்சியில், இந்திய ராணுவத்தின் சிறப்புப்படைப் பிரிவில் உள்ள **45** வீரர்களும், அமெரிக்க ராணுவத்தின் **12** வீர்களும் இதில் பங்கேற்கிறார்கள்.

இந்தியா — அமெரிக்கா இடையிலான பாதுகாப்பு மற்றும் ராணுவ ஒத்துழைப்பை இந்த பயிற்சி மேம்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுவதாக இந்திய பாதுகாப்பு அமைச்சகத்தின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

ஜம்மு — ஸ்ரீநகர் இடையே வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரயில் சேவையை விரைந்து தொடங்குவதற்கு வடக்கு ரயில்வே நடவடிக்கை எடுத்து வருவதாக ஜம்மு கோட்ட முதுநிலை வர்த்தக மேலாளர் திரு **Uchit Singhal** தெரிவித்துள்ளார்.

இன்று ஸ்ரீநகரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வரும் விடுமுறை காலத்திலேயே வந்தே பாரத் ரயில் போக்குவரத்தை தொடங்குவதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு பெய்த கனமழை காரணமாக இந்த வழித்தடத்தில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறுகளை சரிசெய்வதற்கான பராமரிப்புப் பணிகள் நடைபெற்று வருவதாக தெரிவித்தார்.

இந்த வழித்தடம் வந்தே பாரத் ரயில் போக்குவரத்துக்கு உகந்தது என உறுதி செய்யப்பட்ட பிறகு, ரயில் சேவை தொடங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இதனிடையே, ஜம்மு ரயில் நிலையத்தில் புதிய முனையம் மற்றும் நடைமேடை விரிவாக்கப்பணிகள் அமைக்கும் பணி பல

100 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஏற்கனவே திட்டமிட்ட பணிகள் இவ்வாண்டுக்குள் நிறைவடையும் என்று திரு **Uchit Singhal** கூறினார்.

<<<<<<<>>>>>>

ஒரே பாரதம் — உன்னத பாரதம் திட்டத்தின்கீழ், அருணாச்சலப்பிரதேசம், மிசோரம் மாநிலங்களில் நிறுவன நாள் கொண்டாட்டங்கள் இன்று ஆந்திரப்பிரதேச ஆளுநர் மக்கள் மாளிகையில் இன்று நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் பேசிய ஆளுநர் திரு அப்துல் நசீர், இந்த இரு மாநிலங்களின் வளமான, கலாச்சார பாரம்பரியம் மற்றும் இயற்கை எழிலை எடுத்துரைத்தார்.

அருணாச்சலப் பிரதேச மாநிலம் உயரமான மலைகளையும், சிகரங்களையும், ஏரிகளையும் மற்றும் வளமான பாரம்பரியத்தையும் கொண்டதாகவும் மிசோரம் மாநிலத்தில் 84 புள்ளி ஐந்து சதவீதம் வனப்பகுதி உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பன்முக கலாச்சாரத்தை அடிப்படையாக கொண்ட பழங்குடியினர் இந்த பகுதியில் வசித்து வருவதாக அவர் தெரிவித்தார்.

மூங்கில் நடனம், அனைவரையும் கவர்ந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

ஒரே பாரதம் — உன்னத பாரதம் என்ற முழக்கத்திற்கு உத்வேகம் அளிக்கும் வகையில் இதுபோன்ற பல நிகழ்ச்சிகள் நாடு முழுவதும் நடத்தப்பட்டு வருவதாகவும் ஆந்திரப்பிரதேச ஆளுநர் திரு அப்துல் நசீர் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

தெலங்கானாவின் ஹைதராபாதில் நான்கு நக்சலைட்டுகள் இன்று சரணடைந்தனர்.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய தெலங்கானா காவல்துறை தலைவர் திரு சிவாதர் ரெட்டி, மாநில அரசு விடுத்த அழைப்பை ஏற்று இவர்கள் சரணடைந்திருப்பதாக தெரிவித்தார்.

நக்சலைட்டுகள் வசிக்கும் பகுதிகளில் மாநில அரசு சார்பில், பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

சரணடைந்தவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த ஒவ்வொருவருக்கும் தலா 25 லட்சம் ரூபாயை அரசின் சார்பில் அவர் வழங்கினார்.

<<<<<<<>>>>>>

ஜம்மு காஷ்மீரில் ரயில் போக்குவரத்துக்கு உத்வேகம் அளிக்கும் வகையில், ஸ்ரீ மாதா வைஷ்ணோ தேவி கத்ராவுக்கும், ஸ்ரீநகருக்கும் இடையிலான வந்தே பாரத் ரயில் ஜம்முதாவி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இந்த ரயில், ஜம்முதாவி ரயில் நிலையத்தில் இருந்து, காலை ஆறேகால் மணிக்கு புறப்பட்டு, ஸ்ரீமாதா வைஷ்ணோ தேவி கத்ராவை சென்றடையும்.

ஸ்ரீநகரில் பிற்பகல் 2 மணிக்கு இந்த ரயில் புறப்படும்.

<<<<<<<>>>>>>

இந்தியா செயற்கை நுண்ணறிவு உச்சிமாநாடு மக்களிடையே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

சேலத்தை சேர்ந்த பொதுமக்கள் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்திற்கு தங்களது வரவேற்பை தெரிவித்தனர்.

***(Voice Byte — பொதுமக்கள் — 50 Sec. )***

<<<<<<<>>>>>>

ஜெர்மன் ஓபன் பேட்மிண்டன் போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவில் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் அஷ்வினி பட் — ஸ்ரீகா கௌதம் இணை — தைவானின் **Yin Hui Hsu — Jhih Yun Lin** இணையை எதிர்கொள்கிறது.

இப்போட்டி இன்றிரவு மணி **11.30**-க்கு தொடங்குகிறது.

---------------

பிரிஸ்பேர்னில் நடைபெற்ற இந்தியாவுக்கு எதிரான முதலாவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், ஆஸ்திரேலியா 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது

<<<<<<<**END**>>>>>>